**தனமல்வில பிரதேச சபை**

**மொனராகலை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தனமல்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 92 காணித் துண்டுகளினதும் மற்றும் அனைத்து கட்டிடங்களினதும் பெறுமதியினை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் சார் பெறுமதி மதிப்பீட்டாளரின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு டிரக்டர் டேலர் ஒன்றின் பெறுமதி ரூபா 235,000 தொகை எனினும் அதனை ரூபா 2,350,000 தொகை என ரூபா 2,115,000 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது தனமல்வில சேதனப் பசளை முற்றத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் ஒன்றிற்காக ரூபா 262,345 செலவிடப்பட்டிருந்த போதிலும், அச் செலவினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

----------------------------------------------

பிரதேச சபைக்கு எதிராக 2005 மற்றும் 2006 ஆண்டுகளின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த 5 நிர்மாண வேலைகள் தொடர்பாக ஒப்பந்த சங்கத்தினர் வெல்லவாய மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,080,474 தொகையாகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 1,562,346 தொகையாக இருந்தது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, முன்னைய ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய நிலுவைக் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 247,490 மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 21 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,688,584 தொகைக்கான நிலுவைக் கடன் தவணைப் பணம் ரூபா 840,336 தொகையான நிலுவை வட்டியும் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 77,955,142 தொகைக்கான 03 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 19(1)(1) ஆம் பிரிவுகள் | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் நூலக உதவியாளர்கள், காவலாளிகள், சுகாதாரத் தொழிலாளர்கள், பாதை தொழிலாளர்கள், மருந்து கலவையாளர்கள், ஆயுள்வேத தொழிலாளர்கள் மற்றும் சாரதி ஆகிய பதவிகளுக்கு 16 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2014 ஜூலை முதல் 2015 திசெம்பர் வரை சம்பளம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு என ரூபா 2,419,896 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 49 ஆம் பிரிவு | திட்டக் குழுவின் அங்கீகாரம் இன்றி சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 3 தொலைபேசி கம்பனிகளினால் 07 டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 71 | 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர், நூலக உதவியாளர், பாதை தொழிலாளர், சுகாதார தொழிலாளர் மற்றும் வெளிக்கள தொழிலாளர்கள் 19 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு வெளியே நிரந்தர சேவைக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். |
| (இ) 2003 இன் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1942 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதி கட்டளைச் சட்டம் | ஓய்வூதியம் அற்ற தற்காலிக, மாதாந்த சம்பளம் பெறும் ஊழியர்களிடம் நூற்றிற்கு 8 உம் சபையின் பங்களிப்பு நூற்றிற்கு 12 உம் ஆக அரச ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சபையினால் 2015 ஜனவரி முதல் திசெம்பர் வரை 16 அமைய ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையாக ரூபா 319,543 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

----------------------------

2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,742,191 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,663,013 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 4,079,178 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 கடை வாடகை

-----------------------

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 1,181,600 தொகையாகும்.

(ஆ) டன்டும மொரகெடிய சந்தியில் அமைந்துள்ள 19 கடைகளில் இருந்து வருடாந்தம் ரூபா 6,000 வீதம் கடை வாடகை ரூபா 778,750 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) தனமல்வில பிரதேச சபையின் 2015 ஆண்டிற்கு முன்னர் வாராந்த சந்தைகள், இறைச்சிக் கடை மற்றும் மீன் பலகை வாடகைக்கு எடுத்திருந்த நபர்களிடமிருந்து ரூபா 820,575 தொகை நிலுவை வருமானம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 4,370,093 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 170,700 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்பு

-----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 672,220 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

(அ) மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 91,670 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 579,698 தொகை பெறுமதியான 3046 நூலகப் புத்தகங்கள் மற்றும் ரூபா 225,000 தொகை பெறுமதியான உபகரணங்கள் என்பன ஒரு வருடத்தை விஞ்சிய காலம் பயனின்றி செயல்படும் நிலைமையில் காணப்படாத 15 நூலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

3.2 இனங்காணப்படாத நட்டங்கள்

------------------------------------------------------

புத்தள பிரதேச சபையினால் 2014 நவம்பர் 29 ஆந் திகதி ஜீ.ஐ. குழாய்கள் 384 தனமல்வில பிரதேச சபைக்கு வழங்கியிருந்ததுடன் 2016 மே 17 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது ஜீ.ஐ. குழாய்கள் 313 சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்காக வழங்கள் கட்டளைகள் பெற்றிருக்கவில்லை. பெறுவனவு கட்டளைகளின் மூலம் பொருட் பதிவேட்டில் பதிதலும் நடைபெற்றிருக்கவில்லை.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான ரூபா 2,140,100 தொகை பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் ரூபா 275,000 தொகை பெறுமதியான 2 டிரக்கடர் டேலர்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 14 ஆம் மைல் கல் அருகில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான வாராந்த சந்தைக் கட்டிடம் நீண்ட காலம் முதல் வாடகைக்கு கொடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டின் போது உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 2,655,318 தொகை பெறுமதியான இலக்கம் RD-9741 கொண்ட டிரக்டர் வண்டி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் பயன்படுத்தியிருக்கவில்லை.

3.4 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

போதாகம சமாதிகம நீர்ச் செயற்திட்டம்

-------------------------------------------------------------------

போதாகம நீர் செயற்திட்டத்திற்காக தனிமையான கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டம் I, II மற்றும் III நீர் குழாய்கள் பரப்புவதற்காக கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு மற்றும் முதியோர் அமைப்பு ஒன்றிற்கு ரூபா 5.376,976 தொகையொன்று மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த போதிலும் அவ்வாறு நீர் குழாயில் பரப்புவதற்கு தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. அத்துடன் 2016 மே 19 திகதி வரை நீர்வழங்கள் பெற்றுக்கொடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நீர் செயற்திட்டத்தின் கட்டம் II இன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது ஒப்பந்த சங்கமொன்றிற்கு ரூபா 400,000 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------------------

பிளி சரு செயற்திட்டத்தின் கீழ் செவனகல சேதனப் பசளை முற்றம் நிர்மாணிப்பதற்காக ரூபா 2,595,222 தொகைக்கு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அப் பெறுமதியில் ரூபா 1,431,060 தொகைக்கான வேலைப் பகுதி மேற்கொள்வதற்காக கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் 2011 ஏப்ரல் 18 திகதி உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு ரூபா 1,132,858 தொகையொன்று கிடைத்திருந்ததுடன் அவற்றில் ஒப்பந்த சங்கத்திற்கு ரூபா 775,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் 2016 மே 19 திகதி அளவிலும் சேதனப் பசளை உற்பத்தி வேலைகள் நடைபெற்றிருக்கவில்லை.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்பட்ட முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சுற்றாடல் சார் மற்றும் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றல்

-----------------------------------------------------------------------------------------------------

அனைத்து அரச நிறுவனங்களும் தனது தூரநோக்கு மற்றும் பணியை நிறைவேற்றும் செயற்பாட்டில் அந்த நிறுவனத்திற்கு பொருத்தமான சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்புகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய போதிலும் சபையினால், அவர்களின் சுற்றாடல் சார் சமூகப் பொறுப்புக்களை இனங்காண்பதற்கான நடைமுறை ஒன்றினை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

2009 ஜூன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்